DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 179/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 1 P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருபாகரன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சரவணமூர்த்தி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**முதல் விசாரணை**

1. நான் ஆர் ஜி புதூரில் வசித்து வருகிறேன். வெல்டிங் வேலை செய்து வருகிறேன். எனது அப்பா சவர தொழில் செய்து வருகிறார். எனது அம்மா வீட்டோடு உள்ளார். கார்த்திக் எனக்கு பழக்கம் அவ்வப்போது பேசுவேன் காட்டினால் பேசுவேன். கடந்த 03.05.2023 ம் தேதி 6.00 மணியளவில் நான் உடுமலை செல்வதற்காக 7 வது மைல் அருகில் பேருந்திற்காக நின்றிருந்தேன். அப்போது கார்த்திகேயன் அங்கு வந்தார் சரக்கு வாங்கி தருமாறு கேட்டார் நான் வாங்கி கொடுக்க முடியாது என்று சொன்னேன். பணம் 200 ரூபாய் கேட்டார். நான் கொடுக்க முடியாது என்று சொன்னேன் அதற்கு என்னை தகாத வார்த்தையால் திட்டி எனக்கு பின்னால் சென்று கழுத்ததை பிடித்து அவர் பாக்கெட்டில் வைத்திருந்த சிறிய பச்சை கலர் கத்தியை எடுத்து என் கழுத்தில் 3 முறை வெட்டி விட்டார். நான் என் இடது கையால் தடுத்த போது என் கை விரல்களிலும் கத்தியால் கிழித்துவிட்டார். நான் வலி தாங்க முடியாமலும் சத்தம் போட்டு கொண்டு ஓடினேன்.
2. பின்னர் அப்போது என் மாமா வடிவேல் மற்றும் சாமுவேல் பின்னால்

துரத்தி கொண்டு வந்த கார்த்திகேயன் என்பவரிடம் இருந்து என்னை காப்பாற்றினார்கள். அப்போது கார்த்திகேயன் எப்போது இருந்தாலும் உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டினார். கார்த்திகேயன் என்பவர் கத்தியால் கிழித்ததில் எனக்கு என் உதட்டிலும் நெஞ்சுப்பகுதியில் பலத்த இரத்தத காயம் ஏற்பட்டது. தனியார் ஆம்பிலன்ஸ் மூலம் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கணேஷ் மருத்துவமனைக்கு சென்றேன்.

3. உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்த போது போலிசார் வந்துபுகார் வாக்குமூலம் பெற்று கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் தெரியும். புகார் வாக்குமூலம் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பச்சை நிற கத்தியால் தான் என்னை கார்த்திகேயன் கழுத்துபகுதியில் தாக்கினார். கத்தியின் புகைப்படம் அசா.ஆ .2 என குறியீடு செய்யப்படுகிறது. 23 நாட்கள் நான் சிகிச்சையில் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.179 /2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வடிவேல் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சின்னசாமி நாடார் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**முதல் விசாரணை**

நான் சாயப்பட்டறையில் த்து வருகிறேன். டெய்லர் வேலை செய்து வருகிறேன். கடை குறிச்சிகோட்டையில் வைத்துள்ளேன். அசா.1 எனது அக்கா மகன் ஆவார். கடந்த 03. 05.2025 ம் தேதி நான் என் வீட்டிற்கு இரு சக்கர வாகனத்தில் மாலை 5.30 மணியளவில் சென்று கொண்டிருந்த போது 7 வது மைல் அருகில் நான் சென்ற போது எனது அக்கா பையன் கிருபாகரன் என்பவர் இரத்த காயத்துடன் இருநதார் அவரை ஆமபுலன்ஸில் ஏற்றி கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி ஓடிவிட்டார். சாமுவேல் தான் நேரில் பார்த்தார். நான் விசாரித்த போத ஓடிய நபர் கிருபாகரனை கத்தியால் கிழித்து விட்டு சென்றதாக சொன்னார்கள். சாராயம் கேட்டு தகராறு செய்ததாகசொன்னார்கள். நான் ஆம்புலன்ஸில் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று கிருபாகரனை சிகிச்சையில் சேர்த்தோம். சிகிச்சையில் சேர்த்த போது அவரது அப்பா முத்துசாமி என்று சொன்னோம். சரவணமுத்து என்பதுஅவர் பெயர் தவறுதலாக முத்துகுமார் என்று கொடுத்துவிட்டோம். முகவரியை எனது வீட்டு முகவரியாக கொடுத்து விட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.